செய்தி வெளியீடு எண்.133 நாள்.04.03.2017

**திருவள்ளுர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் தலைவர் மற்றும் திருவள்ளுர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் (DISHA), குழு தலைவர் மற்றும் திருவள்ளுர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (11.03.2017) நடைபெற்றது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் , தேசிய கிராம நகரத் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (கிராமம்), தூய்மை பாரத இயக்கம் (கிராமம்) , தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், தீன் தயாள் உபாத்யா கிராமின் கௌசல்யா யோஜனா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் தேசிய சமுக நலத் திட்டம், தேசிய நில பதிவேடுகள் நவீனமயமாக்கும் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (நகரம்), தூய்மை பாரத இயக்கம் (நகரம்), அம்ருத் திட்டம், தேசிய ஊரக குடிநீர்த் திட்டம், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம், பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத் திட்டம், தேசிய சுகாதார திட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், தேசிய தகவல் மையம் , தீனதயாள் உபாத்தியாயா கிராம ஜோதி யோஜனா, பிரதம மந்திரி உஜ்வல் யோஜனா மற்றும் வளர்ச்சித்துறை திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்ட பொருள்களுக்கு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் விவரம் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 18 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.4,40,000/- காசோலைகளையும், 21 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடன் தொகையாக ரூ.1,04,75,000/- காசோலைகளையும், புது வாழ்வுத் திட்டத்தின் சார்பாக கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் தனி நபர் கடன், சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி கடனாக 26 நபர்களுக்கு ரூ.41,90,000/- க்கான காசோலைகளையும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் குழு உடன் தலைவர் மற்றும் அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.பி.எம்.நரசிம்மன் (திருத்தணி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), திரு.டி.ஏ.ஏழுமலை(பூவிருந்தவல்லி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் திரு. ச.சா. குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. கமல் கிஷோர் இ.ஆ.ப. மற்றும் அனைத்து துறை முதல்நிலை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~